## சட்டப்பேரவையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலுரை... 6ஆம் பக்கத் தொடர்ச்சி

அளித்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களின் ஆலோசனைப்படியும், வழிகாட்டுதலின்படியும் துறை சார்பாக 19 அறிவிப்புகளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

**அறிவிப்புகள்.**

1.மாணாக்கர் கல்வியில் உயர்ந்த நிலையை அடைவதற்கும் கல்வி பயில சிறந்த சூழலை அமைத்து தரவும் நவீன வசதிகளுடன்கூடிய விடுதிகள் சிவகங்கை, ஈரோடு, கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். விடுதி மாணாக்கருக்கு ஒருங்கிணைந்த சமையலறைமூலம் உணவு வழங்கும் "அமுத சுரபி" திட்டம். . .

2. திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் நகர்புரத்தில் உள்ள விடுதிகளில் ரூ.9.00 கோடி செலவில் ஒருங்கிணைந்த சமையலறைமூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப் படும். இதன்மூலம் 3,000 மாணாக்கர் பயன்பெறுவர்.

விடுதி மாணாக்கருக்கு படுக்கை உபகரணங்கள் அடங்கிய பெட்டகம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

3.பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் புதியதாக சேரும் மாணாக்கரின் தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும்விதமாக படுக்கை உபகரணங்களான கம்பளி, போர்வை மற்றும் அன்றாட தேவைக்கான பொருட்கள் அடங்கிய பெட்டகம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதன்மூலம் 10,000 மாணாக்கர் பயன்பெறுவர்.

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை பழங்குடியினரின் தேவை களின் அடிப்படையில் ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்.

4. பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மறு சீரமைத்தலின் முதற்கட்டமாக திருவண்ணாமலை மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளை நவீன முன்மாதிரி பள்ளிகளாகவும், மேலும் சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர் மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை தேவையின் அடிப்படையில் வாகனவசதி, அறிவுத் திறன் வகுப்பறைகள் போன்ற நவீன வசதிகளுடன் பள்ளிகளை மேம்படுத்தவும் ரூ.13.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கரின் தனித்திறனை வளர்த்துக் கொள்ள ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் திறன் சார்ந்த திட்டங்கள்.

5. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் பள்ளி / கல்லூரி நேரத்திற்குப் பிறகு மாணாக்கர் கலை, அறிவியல், விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம், மென் மற்றும் பணி திறன்களில் முழுமையான திறனை வளர்த்து கொள்வதற்கு ஏதுவாக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கல்லூரிகளில் "நல்லோசை" சமூக ஆய்வகங்களும், பள்ளி விடுதிகளில் "கற்றல் இனிதே" என்ற திட்டங்கள்மூலம் திறன் சார்ந்த பட்டறைகள், போட்டிகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்படும்.

உயர் கல்வியில் சிறந்து விளங்கும் மாணாக்கருக்கு ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் "உயர் திறன் ஊக்கத் திட்டம்".

6. உயர் கல்வியில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கரை ஊக்குவிக்கும்வகையில், அம்மாணாக்கரின் கல்வி இறுதி ஆண்டில் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.41.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முழுநேர முனைவர் பட்டப் படிப்பிற்கான கல்வி ஊக்கத்தொகை திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,600லிருந்து 2,000 ஆக அதிகரிக்கப்படும்.

7. முனைவர் ஆராய்ச்சி படிப்புகளில் அதிக மாணாக்கர் கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் 1,600 மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை தற்போது கூடுதலாக 400 மாணாக்கருக்கு வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும்வகையில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். இத்திட்டத்திற்காக ரூ.4.00 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

"தொல்குடியினர்" புத்தாய்வுத் திட்டத்திற்காக ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வாளர் (Post doctoral Fellowship) போன்ற இளம் வல்லுநர்களின் திறமைகளை பயன்படுத்தும் வகையில் "தொல்குடி புத்தாய்வுத் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்த நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்திற்கு ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்தி சமூக நீதியை நிலை நாட்ட இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது மகளிரின் பெயரில் செயல்படுத்தப்படும்.

### அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.230 கோடி நிதி!

இதன்மூலம் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியம் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

பழங்குடியினர் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட புதிய பொருளாதார முன்னெடுப்புத் திட்டங்களை ரூ.25.00 கோடியில் செயல்படுத்துதல்.

10. பழங்குடியினரின் விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத தொழில்களை நவீனப்படுத்துதல், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உருவாக்குதல், அரசு/அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின்மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், உற்பத்தி பொருள்களுக்கான தர அடையாளம் (Brand) உருவாக்குதல், சந்தைப்படுத்துதல் போன்ற முன்னெடுப்பு திட்டங்களின்மூலம் பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வன உரிமைச் சட்டத்தை விரைவாகவும் திறம்படவும் செயல்படுத்த ரூ.3.00 கோடியில் செயல் திட்டம்.

11. வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யவும் வன உரிமைச் சட்டத்தின்படி அனைத்து உரிமைகளையும் வனவளப் பாதுகாப்புடன் உரிய துறைகளுடன் ஒருங்கிணைந்து செம்மையாகவும், விரைவாகவும் செயல்படுத்திட ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் தொழிற்பேட்டை அலகுகளை ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

12. திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் அமைந்துள்ள தாட்கோ தொழிற்பேட்டையிலுள்ள அலகுகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோரின் நவீன தேவைகளுக்கேற்ப உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவான வகையில் அனைத்து உட்கட்டமைப்புகளுடனான தொழிற்கூடங்கள் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினருக்கு 4,500 வீடுகள் கட்ட ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு.

13. வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர் மற்றும் இதர பழங்குடியினருக்கு ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து 4,500 வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் குடியிருப்புகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தன்னிறைவு அடையச் செய்ய ரூ.100.00 கோடி ஒதுக்கீடு.

14. பழங்குடியினருக்கான சமூக மற்றும் பொருளாதார கணக்கெடுப்பின்மூலம் பழங்குடியினர் குடியிருப்புகளில் கண்டறியப்படும் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதன்மூலம் தன்னிறைவு பெற்ற குடியிருப்புகளாக மாற்றிட ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்திற்கான நெறிமுறை மற்றும் பயிற்சிக்கு ரூ.3.00 கோடி.

15. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்த இச்சட்டத்தின்கீழ் பதியப்பட்ட வழக்குகள், பாதிக்கப்பட்டோருக்கு தீருதவிகள், மறுவாழ்வு, கூடுதல் நிவாரணம், சட்ட உதவி கிடைப்பதை உறுதி செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தொண்டுசாரா நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கென ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களின் குடியிருப்புகளை இணைப்பதற்கான அணுகுசாலை வசதிகளை ஏற்படுத்த ரூ.50.00 கோடி ஒதுக்கீடு.

16. பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திட ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் அணுகுசாலை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் வகையிலும் வர்த்தக முனைவோர்களிடையே தொழில்களை மேம்படுத்தும்வகையில் தொழில்முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தாட்கோ மூலம் நடத்தப்படும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் வாழ்வியல் விழா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பழைமைப் பண்பாடு, காப்பியம், மொழி வழி தேசப்பற்றைக் காட்சிப்படுத்தும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்வியல் விழா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களின் தரவுகளை மின்பதிப்பாக்கம் செய்ய ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

19.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்டம் (Development Action Plan for SC/ST), வன்கொடுமை தடுப்புச் சட்டம், தொல்குடி, வன உரிமைச் சட்டம், ஆதி திராவிடர் நல மேலாண்மை அமைப்பு (ADW Management System), விடுதிகள் மேலாண்மை அமைப்பு (Hostel Management System) போன்ற பல்வேறு திட்டங்களின் கட்டமைப்புகளை கண்காணித்தல் மற்றும் கண்காணிப்பை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தீர்வுகள் (Technology Solution) ரூ.1.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் பதிலுரை வழங்கினார்.



விக்கிரவாண்டி தொகுதியில் நடைபெறும் இடைத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியுடன் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நூற்றுக்கணக்கான தி.மு.க.வினர் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

### அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில்

# பீஞ்சமந்தை மலைக் கிராமத்திற்கு மினி பேருந்து இயக்கப்படுமா?

## சட்டப் பேரவையில் ஏ.பி.நந்தகுமார் கேள்வி!

சென்னை, ஜூலை 2-

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலை கிராமத்தில் உள்ள மலைவாழ் மக்கள் பயன் பெறும் வகையில் அந்த மலைக் கிராமத்திற்கு மினிப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-

**ஏ.பி. நந்தகுமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டுப் தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலை கிராமம், சாலையே இல்லாத அந்த கிராமத்திற்கு தலைவர் தளபதி அவர்களினுடைய ஆட்சியிலே சாலை அமைத்துத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 100 ஆண்டு காலங்கள் இல்லாத அந்த மலை கிராமம், சாலை அமைத்துத் தந்ததன் வாயிலாக நன்றியுள்ள மக்களான பீஞ்சமந்தை மலை வாழ் மக்கள், இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை அளித்து தங்களுடைய நன்றிக் கடனை செலுத்தி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்த மலைக் கிராமத்திற்கு மினி பேருந்து வசதியைச் செய்து தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் நந்தகுமார் குறிப்பிடுகின்ற பீஞ்சமந்தைப் பகுதிக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, தேர்தல் பொறுப்பாளராக இருந்து நான் பணியாற்றியதினால், அந்தப் பகுதி மக்களுடைய சிரமம் தெரியும், அப்பொழுதெல்லாம் அவர்கள் இரு சக்கர வாகனத்தில்தான் சென்று வந்தார்கள். திராவிட மாடல் முதல்வர் அவர்களுடைய தலைமையிலான ஆட்சி ஏற்பட்டபிறகுதான் அங்கு சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாலைப் பணிகள் முடிவுற்று திறக்கின்ற போதே உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் இங்கு பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அங்கு இயக்குவது cut chase busதான் இயக்க முடியும். அதற்கான பேருந்துகள் வாங்கப்படும் பொழுது, முன்னுரிமை கொடுத்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### குளச்சலில் மினி ஸ்டேடியம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

# குமரி மாவட்ட மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றி!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜூலை 2-

குளச்சலில் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு குமரி மாவட்ட மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள் என கழக மீனவர் அணிச் செயலாளர் அ. ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் தமிழ்நாட்டின் விளையாட்டுத்துறை பல மடங்கு முன்னேறிச் செல்கிறது. கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் விளையாட்டுத்துறையில் புது பாய்ச்சலை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு உத்வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டிற்கான கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறார். இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தைத் தூண்டுகிறார். விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான அனைத்து உதவி உதவிகளையும் செய்து கொடுத்து அவர்களின் சாதனைகளுக்கு உறுதுணையாக இருக்கிறார். விளையாட்டு வீரர்களின் சாதனையை, தமிழ்நாட்டின் சாதனையாகவும் மாற்றி வருகிறார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில், 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என மொத்தம் 98 பதக்கங்களை வென்று ஒட்டு மொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு. கேலோ இந்தியா பதக்கப் பட்டியலில், தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வந்தது இதுவே முதல்முறை. இது போன்ற சாதனைகளைத்தான் எங்களுடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் செய்து வருகிறார். இந்தியா மட்டு மல்ல, ஒட்டுமொத்த ஆசிய கண்டமுமே உற்று நோக்குகின்ற வகையில், 7 ஆவது ஆசிய ஆண்கள் சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கிப் போட்டியை சென்னையில் கடந்த ஆண்டு நடத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார். இது போன்று விளையாட்டுத் துறையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்த சாதனைகள் ஏராளம் உண்டு.

இதன் நீட்சியாக நடப்பாண்டிலும் விளையாட்டுத்துறையில் 24 புதிய அறிவிப்புகளை வெளியிட்டு இளைஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தையும் கவனத்தில் கொண்டு அறிவிப்புகளை வெளியிட்டிருப்பது எங்கள் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, களரி, அடிமுறை, சிலம்பம் போன்ற தென் தமிழ்நாட்டின் பழமையான பாரம்பரிய தற்காப்பு கலைகளும் அவற்றின் உட்பிரிவுகளான சுவடுமுறை, மல்யுத்தம், குத்துவரிசை, அடிதடை, வர்மம் போன்ற அரிய கலைகளையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் சீரிய நோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். விளையாட்டு கட்டமைப்புகளைப் பரவலாக்கம் செய்யும் வகையில், விளையாட்டு அரங்கங்கள் இல்லாத சட்டமன்றத் தொகுதிகளில் தலா ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக 9 சட்டமன்றத் தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக முதலமைச்சருடைய மினி ஸ்டேடியம் திட்டத்தின் கீழ் 22 சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்ட ரங்கங்கள் ரூ. 66 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.யாட்

பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான, சுறு சுறுப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதையும், சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் நோக்கமாக கொண்டிருக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கன்னியாகுமரி மாவட்டத்தின் குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலும் இந்தாண்டு சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார். இது போன்ற திட்டங்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு பெரும் உதவியாக இருக்கும்.

இதற்காக கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், கழக மீனவரணி சார்பாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


# மதுரை மாநகரில் மினி பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

## சட்டப் பேரவையில் கோ.தளபதி கேள்வி!

சென்னை, ஜூலை 2 -

சட்டப் பேரவையில் உறுப்பினர் கோ.தளபதி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-

**கோ.தளபதி:** மதுரை மாநகரில் நிறைய போக்குவரத்து வசதிகள் இருந்தாலுங்கூட, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் அளவிற்கு இந்த மினி பேருந்துகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக, மாட்டுத்தாவணியிலிருந்து அனுப்பானடிக்கு அண்ணா நகர், கே.கே. நகர் வழியாக திருப்பாலையிலிருந்து மூன்றுமாவடிக்கு இது



போன்ற மினி பேருந்துகளை இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** இந்த மினி பேருந்துகள் முத்தமிழறி ஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்டு கிராமப்புறப் பகுதியில் எங்கெல்லாம் அரசுப் பேருந்துகள் இயக்கப்படாமல் இருக்கிறதோ, அந்தப் பகுதியில் இயக்கப்பட்டு, அது அந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது. அதைக் கடந்த கால ஆட்சியிலே புறக்கணிக் கப்பட்டு இருந்தது. இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அந்த மினி பேருந்துகளை மீண்டும் பழையபடி சிறப்பான முறையில் இயங்குவதற்கு ஒரு புதிய வரைவுக் கொள்கையை வகுத்து அளிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த மாதம் அதுகுறித்து உள் துறைச் செயலாளர் அவர்கள் மக்களுடைய கருத்துக் கேட்பு கூட்டம் வைத்திருக்கிறார்கள். அது முடிந்தபிறகு அந்தப் புதிய மினி பேருந்துகளுக்கான வழித்தடங்கள் வழங்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவைப்படுகிற இடங்களுக்கு அவரே வழித்தடத்தை வாங்கி பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலளித்தார்.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் விக்கிரவாண்டி நகரம், பாகம் 228 பகுதியில் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தனர். இந்நிகழ்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் சபா ராஜேந்திரன் , தாயகம் கவி , விழுப்புரம் நகர செயலாளர் சக்கரை, விக்கிரவாண்டி நகர செயலாளர் நைனார் முகமது, விக்கிரவாண்டி நகர தலைவர் அப்துல் சலாம், பகுதி செயலாளர்கள் டி.எஸ்.பி. ராஜகோபால், சொ.வேலு, வி.சுதாகர், ஐசிஎப்.வா.முரளிதரன், பி.கே.மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.தமிழ்வேந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.